திணிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

> *"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
> *மாடல்ல மற்றை யவை"*

என்ற குறளுக்குப் பொருள் சேர்ப்பதைப்போல, கல்வியே அழிவில்லா சொத்து என்பதால், மாணவர்கள் தடையில்லாமல் கல்வி பயில பல்வேறு பொறியியல் கல்லூரிகளையும், தொழில்நுட்பக் கல்லூரிகளையும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும் இந்த ஆண்டே துவக்கிட உத்தரவிட்ட தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2011–2012 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 20 முதல் 23 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*